# ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

தற்போது பயன்படுத்தப்பட்ட போதிலும் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 62,669,598 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. 2012 ஒக்டோபர் 29 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் உரிய சொத்துக்களை மீள்பெறுமதியிட்டுக்கொள்வதற்கான பிரேரணை முன்வைக்கப்பபட்டிருந்தது.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இனங்காணப்படாத ரூபா 1,486,820 தொகையான பிடித்துவைத்தல் பணம் பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சர்வதேசக் கிளையில் 2006 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 3,743,217 தொகையான வகைப்படுத்தப்பட்டிராத அட்டுறு செலவினங்கள் இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சர்வதேசக் கிளையில் ரூபா 2,911,912 தொகையான பெறவேண்டிய கணக்குகளும் ரூபா 11,603,217 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளும் 4 ஆண்டு காலமாகக் காணப்பட்டதுடன் அம் மீதிகளின் உள்ளமையானது மீதிகளின் உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 6.5 ஆம் பந்தி | மேலதிக நேரவேலையைக் கணிப்பிடும் போது தொடர்ச்சியாக மேற்கொள்ளும் மேலதிக நேர வேலை மணித்தியாலங்களில் ஒரு மணித்தியாலத்தின் நான்கில் ஒரு பங்கிற்குக் குறைவான பகுதிகளைக் கருத்திற்கொள்ளலாகாத போதிலும் நிறுவகத்தால் ஒரு மணித்தியாலத்தின் நான்கின் ஓர் பங்கிற்குக் குறைவான பகுதிகள் அனைத்தும் மேலதிக நேரக் கணிப்பீட்டிற்காகப் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 756 | நிறுவகத்தினால் பொருள் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிராததுடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 41,736,535 மிகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,048,202 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளின் அதிகரிப்பு ரூபா 42,784,737 ஆகக் காணப்பட்டது. கற்பித்தற் கட்டணங்கள், பொது நிர்வாகம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பாடநெறிக் கட்டணத்திற்குரிய வருமானம் அதிகரித்தமையும் இதற்கு முக்கிய காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் மீளாய்வாண்டின் போது பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 478 ஆகக் காணப்பட்டதுடன் கடந்த ஆண்டின் போது பதிவாகிய மாணவர்களின் எண்ணிக்கை 415 ஆகக் காணப்பட்டது. நிறுவகத்தினால் 9 பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக 419 மாணவர்களுக்கு 2012 ஆம் ஆண்டில் பட்டம் வழங்கப்பட்டிருந்தது. இதனோடொத்த முன்னைய ஆண்டில் 438 மாணவர்களுக்கு பட்டமளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 09 முகாமைத்துவ ஆலோசனைச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் தேவைப்பாட்டின் படி சேவைக் காலம் தீர்மானிக்கப்பட்டிருக்கையில் குறித்த நேரத்திற்கு நிறுவகப் பதவியணியின் வருகையும் வெளிச்செல்லலும் இடம்பெற வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வின் போது பெருமளவிலான உத்தியோகத்தர்கள் தாமதமாகி வருகை தந்திருந்ததுடன் வருகை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2011 செப்தெம்பர் 19 ஆம் திகதி பல்கலைக்கழகத்தால் பேராசிரியர் ஒருவர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்ட நீதவானினால் செயற்பாட்டினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் ரூபா 350,000 தொகை 2012 ஒக்டோபர் 19 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 யூலை மாதமளவிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சர்வதேசக் கிளையில் இருந்த பணிப்பாளரின் கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக அவரது வேலை கட்டுப்பாட்டுச் சபையால் 2011 நவம்பர் 09 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக அவரால் தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபனவிதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் விசாரிக்காது தனிப்பட்ட சட்டத்தரணிகளை ஈடுபடுத்தியிருந்தமையால் இதற்காக ரூபா 802,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கொள்வனவுத் திட்டம்

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் முகாமைத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்குக் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஆ) பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு

(இ) பதவியணிக் கட்டுப்பாடு